# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 6 | ஜனவரி 1993 | இதழ் 1



வெளியிடுவோர் :

ஈரோடு கிறிஸ்துவின் சபையார்

2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002.

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002 (ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

ஞாயிறு : காலை 9-30—11-00...காலை ஆராதனை
,, : பகல் 11-00—12-00...ஞாயிறு பள்ளி
,, : மாலை 5-30—6-30...திருமறை ஆய்வு & கலந்துரையாடல்
வியாழன் : மாலை 7-15—8-30...வேத ஆய்வு வகுப்புகள்
வெள்ளி : மாலை 7-00—9-00...ஜெப ஆராதனை

## தலைப்புச் செய்திகள்


1. கிறிஸ்தவம் எங்கே போய்க் கொண்டிருக்கிறது? 1-6
2. திருமுழுக்கு என்ன செய்யாது? 7-11
3. பெண்ணுரிமை 12-16
4. அவர் நன்றி கூறினார்! 17-1
5. திரும்பிச் செல்வோம் வாரீர்! 20-29

# THIRUMARAIAASAAN

Editor
E. Z. SELVANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
2, Manalmedu Street, ERODE-638 002, Tamilnadu, India:
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 6 | January—1993 | Issue 1

**ஆசிரியவுரை**

## கிறிஸ்தவம் எங்கே போய்க் கொண்டிருக்கிறது?

முதலாம் நூற்றாண்டின் இறுதி நாட்களுக்குள் அப்போஸ்தலர்கள் அனைவரும் மரித்துப் போயினர். அவர்கள் வாழ்நாட்காலத்திலேயே, தன் நாச வேலையை சாத்தான் துவங்கி விட்டான். அதைக் குறித்து அப்போஸ்தலர்கள் அவ்வப்பொழுது எச்சரித்து வந்திருக்கின்றனர். இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் கொஞ்சம் நஞ்சம் மீதமிருந்த அப்போஸ்தலர்கள் காலத்து விசுவாசிகளும் காலமாகி விட்டனர். சாத்தானுக்கு ரொம்ப சௌகரியமாகப் போய் விட்டது. பெரிய எதிர்ப்பு இல்லாமலே தூய கிறிஸ்தவத்தைத் தனக்கு இஷ்டமானபடியெல்லாம் வளைத்தும், ஒடித்தும், கூட்டியும், குறைத்தும் சிதைத்து ஆறாம் நூற்றாண்டுக்குள் கிறிஸ்தவத்தைத் தன் ஆதிக்கத்தின் கீழ் முழுமையாகக் கொண்டு வந்து விட்டான்.

நிலைமை மிஞ்சிப் போனதை உணர்ந்த மெய் விசுவாசிகள் பதறினர். போர்க்கொடி உயர்த்தினர். ஆனால் அவர்கள் அச்சுறுத்தப்பட்டனர். மீறினவர்கள் நசுக்கப்பட்டனர். இருந்தபோதிலும் புரட்சி ஓயவில்லை. திரைமறைவில், மூலை முடுக்குகளில் உண்மை விரும்பிகள் தங்கள் பாசறைகளை அமைத்துக் கொண்டு பதுங்கிச் செயல்பட்டனர். அவ்வப்பொழுது காரியங்கள் அம்பலமாகி

ஆள்பவரின் அடக்கு முறைகளுக்கும் அச்சுறுத்தலுக்கும் ஆளாயினர். சித்திரவதை செய்யப்பட்டனர்.

அவர்கள் சிந்திய இரத்தம் வீண் போகவில்லை. பதினைந்தாம் நூற்றாண்டில் மாவீரன் மார்ட்டின் லூத்தர் அடிமைத் தளையை அறுத்துக் கொண்டு சீறிப் பாய்ந்தான், கேள்வி கேட்டான், மக்களை சிந்திக்கத் தூண்டினான். விழிப்படையச் செய்தான். அவர் உழைப்பும், தியாகமும, ஜெபமும் கனி கொடுக்க ஆரம்பித்தன. அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்ட மக்கள் ஆர்த்தெழுந்தனர். அணி திரண்டனர். புரட்சி ஓங்குக என்று முழக்கமிட்டனர். ஆணவம் அசைந்து கொடுத்தது. வேறு வழியில்லை, போகிறவர்கள் போகட்டும். இருப்பது மிஞ்சட்டும் என்று விட்டுக் கொடுத்து வழி விட்டனர்

மார்ட்டின் லூத்தர் ஏதோ ஒரு காய்மாகரா உணர்வினாலும் சுயநலத்தினாலும் இப்புரட்சியை ஆரம்பிக்கவில்லை. கர்த்தர் மேலும் அவருடைய வசனத்தின் பேரிலும் அவருக்கு இருந்த மாபெரும் நம்பிக்கையால் அப்படிச் செய்ததால் புரட்சி வெற்றி பெற்ற பிறகும் தன் இறைப்பணியைத் தொடர்ந்து செம்மைப்படுத்த முயன்றார். வேதாகமத்தை மக்களுடைய மொழியில் கொண்டு வந்தார். புரட்சித்தீ — ஐரோப்பா நாடெங்கிலும் பரவிற்று.

அந்நாட்களில் புதிய நாடுகளைக் கண்டுபிடிப்பதும், வியாபாரத்தினிமித்தம் புதிய நாடுகளுக்குப் பயணம் செய்வதும் சர்வ சாதாரணமாக நடந்து வந்தது. அப்படிப்பட்ட மக்களோடு மிஷனரிப் பணியாளர்களும் பல்வேறு நாடுகளுக்குச் சென்று இயேசு கிறிஸ்துவையும் அவருடைய சுவிஷேசத்தையும் பிரகடனம் செய்தனர்.

இந்த ரீதியில் இந்தியாவுக்கும், சுவிசேஷம் வந்து ஆரம்பகால மிஷனரிகள் செய்த தியாகங்களையும், ஆற்றிய தொண்டினையும் கேட்டாலே மெய் சிலிர்க்கும். நரமாமிசப் பட்சிணிகளாகிய ஆப்பிரிக்கா காட்டுமிராண்டிகள் மத்தியில் சுவிசேஷம் அறிவிக்கச் சென்று பல இன்னல்களையும் அனுபவித்து தன் இன்னுயிரை மாய்த்துக் கொண்ட டேவிட் லிவிங்ஸ்டன்கள், பசிக் கொடுமை தாங்க முடியாமல், தன் தொப்பியை ஏந்தி கஞ்சி வாங்கிக் குடித்துக் கொண்டு தன் சுவிசேஷப் பணியைத் தொடர்ந்த வில்லியம் கேரிகள், வெறுவாய் தண்ணீர் குடிக்க மறுத்ததால் உண்பதற்கு வேறு ஒன்றும் கிடைக்காததால் தோலால் ஆன தனது பூட்ஸையே

அறுத்துச் சுட்டு நாக்கைத் துவர்ப்படையச் செய்து கொஞ்சம் தண்ணீர் பருகி தன் களைப்பைப் போக்கிக் கொண்டு ஊழியஞ் செய்த மிஷனரிகளின் வாழ்க்கைகளை எழுதினால் ஏடு கொள்ளாது.

''தீங்கனுபவி சுவிசேஷகனுடைய வேலையைச் செய். உன் ஊழியத்தை நிறைவேற்று'' என்று பவுல் அடியார் தன் வாரிசான தீமோத்தேயவுக்கு எழுதினதற்கிசைவாக தங்கள் வாணாட்களைச் சேவையிலும் தியாகத்திலும் செலவிட்டனர்.

பட்டி தொட்டிகளிலெல்லாம் பள்ளிகள் நிறுவி ஒடுக்கப்பட்டுக் கிடந்த, அவ்வேழைப் பிள்ளைகளுக்கு மேற்படிப்புக்காக விடுதி வசதிகளை உண்டாக்கி நோயாளிகளுக்கு மருத்துவமனைகளை ஏற்படுத்தி அரும்பாடுபட்டு சற்றேறக்குறைய ஒரு இரண்டு நூற்றாண்டுகளுக்குள்ளேயே ஒரு அமைதியான மாபெரும் சமுதாயப் புரச்சியைச் செய்துள்ளனர். இத்தியாகச் செம்மல்கள் ஆற்றிய அரும்பெரும் பணிகள் காரணமாகக் கிறிஸ்தவம் வேரூன்றி தழைத்து ஆங்காங்கே அவர்கள் சேவைக்குச் சாட்சி கூறிக் கொண்டு நிற்கின்றன.

அவர்கள் ஆரோக்கியமான உபதேசங்களைப் போதித்து இரச்சிப்பை முதன்மைப்படுத்தி கிறிஸ்தவ உயர்நெறிகளைப் பரப்பினார்களா? என்பது சர்ச்சைக்குறிய விஷயம். ஆனால் அவர்கள் தியாகத்தையும், நேர்மையான உழைப்பையும், தன் நலம் கருதாத சேவையையும் யாரே குறைத்து மதிப்பீடு செய்ய முடியும்!

காலத்தின் கட்டாயத்தால் அந்த தியாகச் செம்மல்கள், நாம் பக்குவமடைவதற்கு முன்பே நாட்டை விட்டு வெளியேற வேண்டிய சூழ்நிலைகள் ஏற்பட்டன. அவர்கள் விட்டுப்போன சொத்துக்கள், நிறுவனங்களை ஆண்டு பராமரிக்கும் பொறுப்பு நம்மவர்கள் கையில் விடப்பட்டது. ஆட்சி செய்து அனுபவமில்லாமையாலும் பக்குமடையா பண்புகளினாலும், பொருளாசையினாலும் சுயநலத்தாலும் இன்னும் ஏதேதோ காரணங்களினாலும் கிறிஸ்தவ நிறுவனங்கள் பொழிவிழந்தன. சொத்துக்கள் விரயம் செய்யப்பட்டன. கிராம சபைகளும், மக்களும் புறக்கணிக்கப்பட்டனர். ஜாதி சண்டைகள் பெருகி கோஷ்டிகள் முளைத்து எதைச் செய்தாவது பதவிகளைப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்ற வெறி தோன்றி அரசியலை விட கேடு கெட்ட நிலைமையில் கிறிஸ்துவம் அழிவை நோக்கி வேகமாக ஓடிக் கொண்டிருக்கிறது. இது உலகப் பிரகாசமான சீரழிவு நிலை.

ஆன்மீகத்தை எடுத்துக் கொண்டால் அங்கேயும் குழப்பம். அன்றைக்கு வந்த மிஷனரிமார்களுக்கு ஆரோக்கியமான உபதேசம் முழுவதும் தெரிந்திருப்பதற்கு வாய்ப்பில்லை, ஒன்று அந்த நாட்களில் வேதத்தை ஆய்வு செய்து, எது ஆரோக்கியமான உபதேசம் என்று பார்த்துக் கொண்டிருக்க அவகாசமில்லை. வாய்ப்புகளும் குறைவு அப்பொல்லாவை போல தங்களுக்குத் தெரிந்த சத்தியத்தை தைரியமாகவும், நேர்மையாகவும், சுத்த நல்மனச் சாட்சியோடும், தியாக உணர்வோடும், அன்பு உள்ளத்தோடும் விதைத்தார்கள். *(அப். 18:24-28)*.

இரண்டாவதுகிறிஸ்தவத்தைத்தழுவியவர்களும் அன்றைக்கு அவர்களை கடித்துக் கொண்டிருந்த பிரச்சனைகளாகிய பொருளாதாரம், கல்வி, சமுதாய முன்னேற்றம் போன்ற சரீரப் பிரகாரமான காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து இரட்சிப்பைப் பின்னுக்குத் தள்ளிவிட்டனர். ஆனாலும் கிறிஸ்தவம் அவர்களுக்குச் செய்த நன்மைகளுக்கு மிகவும் நன்றியுள்ளவர்களாகவே நடந்து கொண்டார்கள். காலமும் சூழ்நிலைகளும் மாறினபொழுது ஆட்சிக் கட்டில் ஏறிய மண்ணின் மைந்தர்கள் செய்திருக்க வேண்டியது என்ன? தேவனுடைய தொடர்ந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வதற்கு மூலகாரணமாக இருக்க வேண்டிய விசுவாசத்தை வளர்க்கும் வேத அறிவை திருச்சபை மக்களுக்கும் புகட்டியிருக்க வேண்டும், துர்திஷ்டவசமாக அதைச் செய்யத் தவறி விட்டார்கள் விளைவு?

இளைய சமுதாயம் கிறிஸ்தவத்தையும், அதன் சிறப்புக்களையும், அறியும் வாய்ப்பை இழந்தனர். திருச்சபை நடவடிக்கைகளில் இளைஞர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். விவிலியப் பேருண்மைகளும் உயர்நெறிகளும் இளைஞர்களை ஈர்க்கும் வகையில் அவர்களுக்குக் கற்பிக்கப்படவில்லை. காலமெல்லாம் இயேசு பெத்தலையில் பிறந்தார் என்றும், இயேசுவின் உவமைகளுக்குப் பாட்டி கதை பாணியில் விளக்கம் அளிக்கும் உப்பு சப்பற்ற பிரசங்கங்களும், முன்னூறு ஆண்டு காலத்துக்கு முற்பட்ட வடமொழி கலந்த வேதாகமத்தமிழும் இளையசமுதாயம் மார்க்கத்தின் மேல் நாட்டம் கொள்ள முடியாமல் தடுத்துக் கொண்டிருக்கின்றன. அதனால் அவர்கள் பாதைமாறி அரசியல் மற்றும், இதர சமூக நல அமைப்புகளின் மீது நாட்டம் செலுத்துகின்றனர். ஆராதனைகள், ஜெபக் கூட்டங்கள் வேத ஆய்வுகள் அவர்களுக்கு அர்த்தமற்ற சடங்குகளாகத் தென்படுகின்றன.

இந்த நிலையைத் திருச்சபை ஆளுநர்கள் உணர்ந்து கொண்டு வருகிறார்கள் என்று தோன்றுகிறது. அதற்கு அவர்கள் திட்டமிட்டு வேத அறிவை பல்வேறு நிலைகளிலும் கற்பிக்க ஏற்பாடு செய்வதற்குப் பதிலாக புறமதங்களும், ரோமன் கத்தோலிக்கங்களும், அனுஷ்டிக்கும் சில அர்த்தமற்ற பண்டிகைகளையும் விழாக்களையும் உட்படுத்தி ஒரு போலி பக்தியை ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள். அந்த வழியில் வந்தது தான் தற்காலத்தில் பிரபலமடைந்து வரும் லெந்து நாட்கள், மரித்த நாற்பதாவது நாளில் ஒரு சிறப்புக் கட்டம் என்பதெல்லாம்.

திருச்சபையின் குழப்பத்தைப் புரிந்து கொண்ட சாத்தான் தனது குட்டிச்சாத்தான்களை ஏவிவிட்டு அவர்களுக்கு மாறுவேடம் அணிவித்து திருச்சபைக்குள் ஊடுருவச் செய்து கொண்டிருக்கிறான். எலி கஷ்டப்பட்டு வளை தோண்டி வைத்திருக்கும், அதற்குள் நச்சரவம் உள் நுழைந்து எலியை விரட்டிவிட்டு வளையைத்தான் ஆக்கிரமித்துக் கொள்ளும். அதைப்போல மிஷனரிகளை அரும்பாடு பட்டு தியாகம் செய்து வளர்த்த திருச்சபையாகிய தோட்டத்துக்குள் நச்சரவங்களைப் போன்று சுயநலமிகளும், கள்ளப்போதகர்களும், உள் நுழைந்து மிஷனரிகள் வளர்த்து விட்ட திருச்சபை என்ற மரத்தின் கனிகளை காணிக்கை என்ற பெயரால் அறுவடை செய்து தங்கள் களஞ்சியங்களை நிரப்பிக்கொண்டு கர்த்தர் என்னை ஆசீர்வதித்திருக்கிறார் என்று கூறிக்கொண்டு, கோடிக்கணக்கான ரூபாய்களை முதலீடு செய்து மில் முதலாளிகள், தொழில் அதிபர்கள் அனுபவிக்க முடியாத சுகத்தை அனுபவித்துக் கொண்டு உலா வருகிறார்கள். இவர்களை ஆசிர்வதிக்கிற தேவன் முதல் நூற்றாண்டில் இரத்த இரட்சிகளாக மரித்த பரிசுத்தவான்களையும், காட்டுமிராண்டிகள் மத்தியில் பணியாற்றி பல இன்னல்கள் அடைந்து உயிர்நீத்த தியாகச் செம்மல்களை ஏன் ஆசிர்வதிக்க வில்லை சுகங்களும் இன்றைக்கு விட அன்றைக்கல்லவா தேவைப் பட்டது? ஏன் கர்த்தர் அந்த வரங்களை அவர்களுக்குக் கொடுக்க வில்லை? கிறிஸ்தவ அறம் தழைக்க வேண்டும் என்ற வாஞ்சையுள்ள சான்றோரே, சிந்திப்பீர்!

ஒரு காலத்தில் கிறிஸ்தவம் என்றால் மக்களின் நினைவுக்கு வந்ததெல்லாம் தியாகம், நேர்மை, உழைப்பு, பகுத்தறிவு, தொண்டு இன்றைக்கு? கிறிஸ்தவத்தைப் போல ஒரு மூட நம்பிக்கை நிறைந்த மார்க்கம் வேறு ஒன்று இல்லை என்று அஞ்ஞானிகள் சான்றிதழ் வழங்குகிறார்கள். இந்து மதத்தைக் கவ்வியிருந்த மூட நம்பிக்கைகள் எல்லாம் தந்தை பெரியார் துரத்திட அவை

களெல்லாம் கிறிஸ்தவ மதத்துக்குள் புகுந்து கொண்டது என்று ஒரு பழுத்த கிறிஸ்தவர் கூறித் துக்கப்பட்டுக் கொண்டார். எவ்வளவு உண்மை! இதைத் தடுத்து நிறுத்த உங்கள் ஆலோசனை என்ன? வாருங்கள் கூடுவோம். கருத்துப் பரிமாற்றங்கள் செய்வோம், முடிவெடுப்போம், செயல்படுவோம் காலம் சமீபத்து விட்டது. இனியும் தாமதிப்போமானால், ''மனுஷ குமாரன் வரும் போது விசுவாசத்தை காண்பாரோ'' என்று நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஐயப்பாடு உண்மையாகிவிடும்.

— ஈ. இசட். செல்வநாயகம்

---

29-ம் பக்க தொடர்ச்சி

இன்று நாம் கிறிஸ்தவர்களாக மட்டுமே இருக்கமுடியும் என்பதில் பூரண நம்பிக்கை கொண்டுள்ளோம். வேதாகமத்தை மட்டுமே மூலமாக எடுத்துக் கொண்டு, சிதறிக் கிடக்கும்பிரிவினைக் கூட்டங்கள் தங்கள் கொள்கைகளை விட்டு, ஒன்றுபடவேண்டுகிறோம். மத பிரிவினைகளை நோக்கி எங்கள் மன்றாட்டு இதோ: தயவு செய்து உங்கள் நிலையை மறு பரிசீலனை செய்யுங்கள். உங்கள் நம்பிக்கை பழக்க வழக்கங்களைமாற்றி வேதாகமம் பேசும் இடத்தில் பேசுங்கள்; அது பேசாததை நீங்களும் பேசாதீர்கள் .. **அலெக்சாண்டர் காம்பெல்** அல்லது **பார்ட்டன் ஸ்டோன்** அல்லது **ஜான்வெஸ்லி மார்ட்டின் லூதர்** அல்லது **கால்வின்** அல்லது எந்த மனிதனையாவது பின்பற்றுங்கள் என நாங்கள் சொல்லவில்லை. மாறாக, உங்களை வேண்டுவதெல்லாம்: **கிறிஸ்துவிடம் திரும்புங்கள்! அவருடைய வார்த்தையை மட்டுமே பின்பற்றுங்கள்! புதிய ஏற்பாட்டு சபையாகிய கிறிஸ்துவின் சபைக்குத் திரும்புங்கள்!** நமது பழக்கங்களிலும், நம்பிக்கையிலும் நாம் பிரிவினை சபையாக இருக்கக்கூடாது என்பதே எங்கள் ஜெபம்!

இது ஒன்று மட்டும்தான் மத உலகில் ஒற்றுமைக்கான வழி. அன்று இது சாத்தியமாயிற்று; அப்படியானால் இன்றும் அது சாத்தியமே.

கிறுஸ்துவில் நம்பிக்கை வைத்துள்ளவர்கள் எல்லோரும் ஆதிச் சபைகள் முதலாம் நூற்றாண்டில் நடந்ததைப் போல, கிறிஸ்துவின் வழியில் நடக்கவேண்டும் என்பதே எங்கள் நம்பிக்கையும் ஜெபமுமாகும்.

முதலாம் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள் எவ்வாறு இருந்தார்களோ அதேபோல 20-ம் நூற்றாண்டிலும் நாம் இருக்க முடியும், அவர்கள் நம்பியதை நாம் நம்பினால் அவர்கள் கீழ்ப்படிந்ததைப் போல நாமும் கீழ்ப்படிந்தால் அவர்கள், நடந்ததைப் போல நாமும் நடந்தால், கிறிஸ்துவின் சபையிலே நாம் அங்கம் வகிப்போம்.

நாம் முன்னறே, பின்னோக்கிச் செல்வோம் .. ஆம்! முதல் நூற்றாண்டு **கிறிஸ்துவின் சபையை** நோக்கிச் செல்வோம்.

இயேசு கிறிஸ்து கட்டிய சபை:- **கிறிஸ்துவின் சபை**, அதன் உறுப்பினர்கள் - **கிறிஸ்தவர்கள்** கிறிஸ்தவர்களின் ஒரே முழுமையான சட்ட நூல், எல்லா சூழ்நிலைகளுக்கும் போதுமான சட்ட நூல்- **புதிய ஏற்பாடு.**

**[ராபர்ட் ஜி. டாக்கரி** — **எஸ். எஸ். ராஜன்**

# திருமுழுக்கு என்ன செய்யாது?

வேதாகமம் திருமுழுக்கு அவசியம் என்று போதிக்கிறது. அது இரட்சிக்கிறது என்று பேதுருவும் (1 பேதுரு 3.21) ஒருவன் இரட்சிக்கப்படவேண்டும் என்றால் விசுவாசித்து திருமுழுக்குப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று இயேசு கிறிஸ்துவும் (மாற்கு 16:16) அது பாவ மன்னிப்புப் பெற்றுத் தருகிறது (அப்.2:38) ஒருவனைச் சபைக்குள்ளும் கிறிஸ்துவுக்குள்ளும் கொண்டு சேர்க்கிறது என்று (ரோமர். 6:3,4 1 கொரி 12:13) என்று அப்போஸ்தலன் பவுலும் போதிக்கின்றனர். அதுதான் மறுபிறப்புக்கே அடித்தளம், நுழைவாயில் என்று இயேசு கிறிஸ்து சொல்லுகிறார். அப்படியானால் இரட்சிக்கப்படுவதற்கு ஞானஸ்நானம் மட்டும் போதுமா?

**ஞானஸ்நானமாகிய திருமுழுக்கு மட்டுமே ஒருவனை இரட்சிக்காது.**

திருமுழுக்கு தேவனுடைய கட்டளை அல்லது இரட்சிப்பதற்கு திருமுழுக்கு முக்கியமான நிபந்தனைகளில் ஒன்று என்று சொல்லுகிறீர்கள் சரி, திருமுழுக்குத்தானே, இதோ பெற்றுக் கொள்கிறேன் என்று கூறி ஒருவன் திருமுழுக்கை மட்டும் பெற்று கொண்டு நான் இரட்ச்சிக்கப்பட்டு விட்டேன் என்று திருப்தி பட்டுக்கொள்வானேயானால் அது தவறானதிருப்தி. வேதாகமம் அதை அங்கீகரிக்காது.

திருமுழுக்கு முக்கியம், அந்தக் கட்டத்தில்தான் ஒரு பாவி இயேசுவின் இரத்தத்தைச் சந்திக்கிறான் என்பது மெய்யே. ஆனாலும் ஞானஸ்நானம் சம்பந்தப்பட்ட கட்டளைத் தொகுப்பின் மற்ற அம்சங்களையும் அவன் நிறைவேற்றியே தீரவேண்டும். அப்பொழுது தான் திருமுழுக்கு அர்த்தமுள்ளதாக இருக்கும். அதனால் நமக்கு வாக்களிக்கப்பட்டிருக்கிற ஆசீர்வாதங்களும் கிடைக்கும்.

அந்தக் கட்டளைத் தொகுப்புக் கீழ்வருமாறு: ஒருவன் தேவனுடைய திருவசனத்தைக் கேட்டு விசுவாசித்து மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்ய வேண்டும் (ரோமர் 10:17; எபி 11:6; யோவான் 3:16; லூக் 13:3; மத் 10;32,33) இதில் எந்தக் கட்டளையும் புறக்கணிக்கத் தக்கதல்ல.

**மேற்சொன்ன அனைத்தையுஸ் செய்திருந்தாலும் திரு முழுக்கு பச்சிளங்குழந்தைகளையோ, அல்லது புரிந்து கொள்ள முடியாத சிறு பிள்ளைகளையோ இரட்சிக்காது**

குழந்தைகளும், வயது வராத சிறு பிள்ளைகளும் திருமுழுக்குப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று வேதாகமம் போதிப்பதுமில்லை. அப்படிப்பட்ட முன் உதாரணமும் கிடையாது. ஒருவன் தேவனுடைய வார்த்தைகளை விசுவாசித்து அதன் அர்த்தத்தையும் புரிந்து கொண்டு கீழ்படிய வேண்டும். (ரோமர் 16.17; மாற்கு 16:16) குழந்தைகள் அப்படிச் செய்ய இயலாதவைகள் என்று நமக்குத் தெரியுமே. அப்படியானால் அவர்கள் இரட்சிக்கப்பட வேண்டாமா? வேண்டியதில்லை, முதலாவது அவர்கள் பாவிகளல்ல. அவர்கள் இரட்சிப்பை இழந்து விடவில்லை. அவர்கள் தேவனுடைய கரங்களில் பாதுகாப்பாக இருக்கிறார்கள். அவர்கள் வளர்ந்து பெரியவர்களாகி தாங்கள் செய்கிறது தவறு அல்லது சரி என்று உணர்ந்து கொள்ளக் கூடிய வயது வந்த பிறகே அவர்கள் இரட்சிக்கப்பட வேண்டிய அவசியம் உண்டாகிறது. அவசியமில்லாத ஒன்றை ஒரு சடங்கினால் சரி செய்து விட முடியும் என்று நம்ப வைத்திருப்பது பிசாசின் தந்திர வேலை, வஞ்சகத் திட்டம், ஏவாளும், ஆதாமும் ஏமாந்ததினால் மனுக்குலத்துக்கு வந்த கேடு போதும், இனியாவது விழிப்படைந்து வேதத்தின் வெளிச்சத்தில் நடப்போம்.

**வயது வந்தவர்களே கூட திருமுழுக்கின் பொருள் விளங்காமல் திருமுழுக்கு பெற்றுக் கொண்டாலும் பயன் இல்லை.**

திருமுழுக்குப் பெற்றுக் கொண்டவர்களின் பட்டியல் அப்போஸ்தலர் நடவடிக்கைகளில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவைகள் எல்லாவற்றிலுமே சுவிஷேசம் பிரசங்கிக்கப் பட்டிருக்கிறது. தேவ வசனத்தில் புரிந்து கொண்டு அதன் உண்மைகளை ஏற்றுக் கொண்டவர்கள் மட்டுமே திருமுழுக்குப் பெற்று இருக்கிறார்கள். திருமுழுக்கின் முக்கியத்துவமும் அர்த்தமும் விளங்காமல் நண்பர்களின் செல்வாக்கினாலோ அல்லது மற்றவர்களுடைய கட்டாயத்திற்காகவோ திருமுழுக்குப் பெற்றுக் கொள்ளத் தூண்டப்பட்டவர்கள் இரட்சிப்படைய வாய்ப்பில்லை. வேறு சிலர் தாங்கள் இரட்சிக்கப்பட்டுவிட்டதாகவும், அதற்கடையாளமாக திருமுழுக்குப் பெற்றுக்

கொண்டதாகவும் கூறுவர். இரட்சிக்கப்பட்டவர்களுக்கு ஏன் திருமுழுக்கு என்று கேட்டால் நாங்கள் இயேசுகிறிஸ்துவின் முன் மாதிரியைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லுவார்கள். அவர்கள் திருமுழுக்கின் மெய்ப் பொருளை உணராமல் தவறான எண்ணமுள்ளவர்களாக இருக்கிறார்கள். துணிகளில் உள்ள அழுக்கை நீக்குவதற்குத் தான் சோப்பை பயன்படுத்துகிறோம். இவர்கள் சொல்லுகிற கூற்றுப்படி பார்த்தால் சலவை வேலைகள் எல்லாம் முடிந்து துணியைக் காய வைக்கும் தருணத்தில் சோப்பு உபயோகிப்போம் என்கிறது போல இருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் தான் பாவத்தைக் கழுவும். இவர்கள் அந்த இரத்தத்தைச் சந்திப்பதற்கு முன்பே தங்கள் பாவங்கள் கழுவப்பட்டு விட்டது என்றால் எப்படி, சிந்திப்பீர் ?

ஒருவன் தேவனை விசுவாசிக்காமலும் இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்யாமலும் திருமுழுக்குப் பெற்றுக் கொண்டால் அவனுக்கு இரட்சிப்புக் கிடையாது. ஏதோ ஒரு நோக்கத்திற்காக, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைஇரட்சகராக ஏற்றுக் கொள்ளாமல் எவ்வளவு ஆழமான புண்ணிய நதி என்று பெயர் பெற்ற தண்ணீரில் மூழ்கினாலும் பயனில்லை. முன்பு காய்ந்த பாவி இப்பொழுது நனைந்த பாவி. **''விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம்'.** (எபி. 11.6) இரட்சிப்புண்டாக அறிக்கை செய்ய வேண்டும்' அறிக்கை பண்ணுதல் என்றால் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை உலக இரட்சகர் என்றும் தேவனுடைய குமாரன் எனவும் அறிக்கை செய்வதைக் குறிக்கிறது (ரோமர் 10. 9, 10) அப். 8 - ம் அதிகாரத்தில் எத்தியோப்பியா மந்திரி அவ்வண்ணமே செய்தார் என்பதை வாசித்து தெரிந்து கொள்க.

**மனந்திரும்பி தன் பாவங்களை விட்டு விடாதவனை திருமுழுக்கு மட்டும் இரட்சித்து விடாது**

கிறிஸ்து ''மனந்திரும்பு இல்லாவிட்டால் மடிந்து போவாய்'' என்கிறார். (லூக். 13. 3)'' எங்குமுள்ள மனிதர்கள் மனம் திரும்ப வேண்டும்'' என்று பவுல் கூறுகிறார். (அப். 17 : 30) பேதுருவும் அப்போஸ்தலர்களும் பெந்தேகொஸ்தே பண்டிகை நாளில் தங்கள் முதல் சுவிசேஷ உரையில் மனந்திரும்பி திருமுழுக்குப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று அறிவுறுத்துகிறார்கள். (அப். 2.38) இந்தச் சம்பவத்தை கவனித்து பார்ப்பீர்களானால் மனந்-

திரும்புதலும் திருமுழுக்கும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து. இடக்கிறதைக் காண்பீர்கள். அந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படியும் போது பாவ மன்னிப்புக் கிடைக்கிறது.

ஒருவன் மனந்திரும்ப விருப்பமில்லாமல் வெறுமனே திருமுழுக்குப் பெற்றுக் கொள்வானேயானால் அவனுக்குப் பாவ மன்னிப்புக் கிடைக்காது. அதனால் தான் ஒருவனை இரட்சிக்கும் பொறுப்பையும் சபையில் சேர்த்துக் கொள்ளும் பொறுப்பையும் கர்த்தரே ஏற்றுக் கொண்டிருக்கிறார். (அப்.2.47) ஏனெனில் ஒருவன் மெய்யாகவே மனந்திரும்பி கீழ்ப்படிகிறானோ அல்லது மாயம் பண்ணுகிறானோ என்பது அவருக்குத் தெரியும்.

## வேதாகம அங்கீகாரம் இல்லாத திருமுழுக்குகளைப் பெற்றுக் கொள்பவர்களுக்கு இரட்சிப்புக் கிடையாது'

''கிறிஸ்துவுக்கு வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது'' (மத் 28: 18) ஆகவே நாம் இரட்சிப்பு விஷயத்தில்கூட அவருடைய கட்டளைப்படி கொஞ்சமும் மிகாமல் செய்வது அவசியம். மேலும் வேறொரு இடத்தில் ''அவராலே (இயேசுகிறிஸ்து) யன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை'' என்று சொல்லப்பட்டிருக்கிறது. (அப் 4: 12) ஆகவே நாம் திருமுழுக்குப் பெற்றுக் கொள்ளும்போது பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும். (மத் 28: 19)

ஒருவன் இரட்சிக்கப்படுவது ஒருவனுடைய அபிப்பிராயமோ அல்லது தலைமைப் போதகருடைய அறிவிப்போ அல்ல. தேவனுடைய கட்டளையைக் கைக் கொண்டு கீழ்ப்படிய வேண்டும். அதையெல்லாம் கருத்தாய் கவனிக்காமல் ஏதாவது குறுக்கு வழி இருக்குமோ என்று அலைந்து கொண்டு திரிந்தால் அப்படிப்பட்டவனை பிசாசு கவனித்து கொண்டிருந்து ''லபக்'' என்று கவ்விப் பிடித்து ஏதாவது ஒரு சபைப் பிரிவுக் கூட்டத்திலோ அல்லது மனித ஞானத்தால் உருவாக்கப்பட்ட ஒரு நிறுவனத்திலோ போய் மாட்டிக் கொள்ளச் செய்து விடுவான். ஒருவன் மெய்யாகவே கர்த்தருடைய வசனத்துக்குக் கீழ்ப்படிகிறவனாயிருந்தால் தேவன் அவனை நோக்கிப் பார்ப்பார். (ஏசாயா 66.2) அவன் பொய்யை நம்பும் நிலைக்குத் தள்ளப்பட்டான் (2 தெச 2.12) கர்த்தர் அவனை இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்துக்

காள்வார். சம்மந்தப்பட்ட அந்த மனுஷனும் தான் கர்த்தருடைய சரீரமாகிய சபையில் அங்கமாகி விட்டதை உணர்வான்.

மேற் சொன்ன காரியங்களைக் கவனமாய் வாசிக்கிற நண்பனே, சகோதரியே நீங்கள் வேத வாக்கியங்களின்படி அந்தக் கட்டளைத் தொகுப்பு முழுமைக்கும் கீழ்ப்படிந்து இறுதியாக திருமுழுக்குப் பெற்றிருக்கிறீர்களா? அப்படியில்லையென்றால் நீங்கள் வேத வசனங்களை நன்றாய் வாசித்து தியானியுங்கள்.

நீங்கள் இரட்சிக்கப்படுவதற்காக அவருக்கு ஒப்புக்கொடுத்து—கீழ்ப்படியுங்கள். அவருடையகுடும்பமாகிய சபையில் அங்க, மாகுங்கள், இந்த விஷயத்தில் உங்களுக்கு ஆலோசனைகளோ உதவியோ தேவைப்பட்டால் எங்களை, அருகிலுள்ள கிறிஸ்துவின் சபையாரை அணுகுங்கள்,

---

## தேவ பிள்ளைகளின் வெற்றியின் இரகசியம் கீழ்ப்படிதலில் உள்ளது.

நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவரும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை. நான் மோசே-யோடே இருந்தது போல உன்னோடும் இருப்பேன் நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை உன்னை கைவிடுவது மில்லை.

பலங்கொண்டு திட மனதாயிரு. இந்த ஜனத்தின் பிதாக்களுக்கு நான் கொடுப்பேன் என்று ஆணையிட்ட தேசத்தை நீ இவர்களுக்குப் பங்கிடுவாய்.

என் தாசனாகிய மோசே உனக்குக் கற்பித்த நியாயப் பிரமாணத்தின் படியெல்லாம் செய்யக் கவன, மாயிருக்க மாத்திரம் மிகவும் பலங்கொண்டு திடமன-தாயிரு. நீ போகும் இடமெல்லாம்- புத்திமானாய் நடந்து கொள்ளும்படிக்கு அதைவிட்டு வலது இடது புறம் வில-காதிருப்பாயாக.

யோசுவா 1:5-9

---

# பெண்ணுரிமை

உலகம் வேகமாக மாறிக் கொண்டு வருகிறது. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துவரும் விஞ்ஞானம் தரும் பலவிதமான நூதன கண்டுபிடிப்புக்கள் உலகத்தைச் சுருக்கி ஒரு மூலையிலே நடைபெறுகிற ஒரு சிறு காரியம் கூட மறுகோடி-யில் வாழுகிற ஒரு மனிதன் நொடி நேரத்தில் தெரிந்து கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது. ஆக ஒரு குறிப்பிட்ட நாட்டின் நாகரிகம், பழக்கவழக்கங்கள் வாழ்க்கைமுறைகள் எளிதில் மற்றவர் களையும் ஈர்த்துக் கொள்ளுகிறது.

குறிப்பாக பெண் இனம் சமீப காலங்களில் மாபெரும் மாற்-றத்தை அடைந்து கொண்டு வருகிறது. சமஉரிமை, பெண்ணுரிமை பெண்கள் விடுதலை இயக்கம் என்று புதிய புதிய அமைப்புகள் உருவாகி பெண்ணினத்திற்காக வக்காலத்து வாங்கிக் கொண்டு போர்க்கொடி உயர்த்தி ஆவேசமாகக் கத்தி தங்கள் உரிமைகளாகப் போராடுகின்றன. அவர்கள் போராடுவதில் நியாயம் இல்லை என்று ஒதுக்கிவிட முடியாது. ஒரு சில சமுதாயத்திலும், வீடுகளிலும் பெண்ணினம் பல கொடுமைகளைத் தாங்கிக் கொண்டு வாயில்லாப் பூச்சிகளாக, ஊமைகளாக நடத்தப்படுகிறார்கள் என்பது ஓரளவு உண்மைதான். இவைகளுக்கெல்லாம் இயல்பான காரணங்கள் இல்லாமல் இல்லை.

1) சரீரப் பிரகாரமாக பெண்கள் ஆண்களைப்போல பல-முள்ள சரீர வாகு உடையவர்கள் அல்ல. இது சில விசயங்களில் இப்படிப்பட்ட விளைவுகளை ஏற்படுத்தலாம். அந்தப்படி புருஷர்-களே மனைவியானவள் பெலவீன பண்டமாயிருக்கிற படியால் உங்கள் ஜெபங்களுக்குத் தடைவராதபடிக்கு நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து உங்களுடனே கூட அவர்களும் நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக் கொள்கிறவர்களானபடி-யினால் அவர்களுக்குச் செய்ய வேண்டிய கனத்தை செய்யுங்கள் (1 பேதுரு 3.7) "புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள் அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து ....'

''தங்கள் சரீரங்களாக பாவித்து அவர்களில் அன்பு கூர வேண்டும். தன் மனைவியில் அன்பு கூருகிறவன் தன்னில் தானே

அன்பு கூருகிறான்'' (எபே 5:25,28,29) என்றெல்லாம் வேத வாக்கியங்களும் அவர்களுக்காகப் பரிந்து பேசுகின்றன. ஆனால் உலக நடைமுறையில் அப்படியில்லை. இயற்கையிலேயே சரீர பல வீனமுள்ளவர்களாக இருப்பதை தங்களுக்குச் சாதகமாக எடுத்துக் கொண்டு ஆண்கள் பெண்களைக் கொடுமைப்படுத்துகின்றனர். சில வேலைகளில் ஆண்கள் மனைவிமார்களை வேலைக்காரியைப் போல வும், அடிமைகளாகவும் நினைத்துக் கொண்டு அவர்களுடைய உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுப்பதோ அவர்கள் மீது அன்பு காட்டுவதோ இல்லை.

2) வாழ்க்கை முறையிலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் நிறைய வேறுபாடு உண்டு. பெண்கள் குழந்தைகளைப் பெற்று அத்துடன் வளர்க்கும் பொறுப்பை எடுத்துக்கொள்ளும் வகையில் அவர்கள் உடல்வாகும், மனப்பாங்கும் உடையவர்களாக இருக்கி-றார்கள். கணவன்மார்களோ வெளியில் சென்று குடும்பத்தேவை-களுக்காக சம்பாதிக்கும் திடமான சரீரமும் சமர்த்தியமும் உடை-யவர்களாகப் படைக்கப்பட்டிருக்கிறார்கள். சமுதாயத்தில் ஒரு குடும்பத்தின் அந்தஸ்து அந்த குடும்பத் தலைவரின் ஆற்றலையும் குடும்பத்தலைவியின் பொறுப்புணர்ச்சியையும் பொறுத்தே அமை-கிறது. இதைக் குறித்து ''ஒருவன் தன் சொந்த ஜனங்களையும் விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற் போனால் அவன் விசுவாசத்தை மறுதலிக்கிறவனும், அவிசுவாசியிலும் கெட்டவனா-யிருப்பான்.'' என்று ஆண்களுக்கு புத்திமதி கூறியும் (1 தீமோ 5,8) அதே அதிகாரத்தில் இன்னும் கொஞ்சம் கீழே வாசித்தால் பிள்-ளைகளைப் பெறவும் வீட்டை நடத்தவும், விரோதியானவன் நிந்திக்கிறதற்கு இடமுண்டாகமலிருக்கவும் வேண்டும் என்று பெண் களுக்கும் புத்தி சொல்லப்பட்டிருக்கிறது (1 தீமோ 5.14) பேதுரு இதைப்பற்றிச் சொல்லும்போது பெண்கள் புருஷன்மார்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்றும் புருஷர்களும் மனைவிகள் பலவீனமானவர்கள் என்பதை கருத்தில்கொண்டு விவேகத்தோடு அவர்களுடனே வாழவேண்டும் என்று புத்திமதி கூறியிருக்கிறார் (1 பேதுரு 3.4,7).

ஆனால் இவைகளையெல்லாம் சமுதாயம் புறக்கணித்து விட்டு உலகின் பல்வேறு பகுதிகளில் பெண்குழந்தைகளை ஆண் குழந்தைகளை விட குறைவாக மதிப்பிட்டு அவர்களை இரண்டாந்-தரக் குடிமக்களாக எண்ணி நடத்தப்படுகிறார்கள். அவர்களுக்கு

கல்வியறிவு உட்பட பல சௌகரியங்கள் மறுக்கப்பட்டு வந்துள்ளன அதன் காரணமாக வெளியே பெண்கள் வேலைக்குப்போக நேரிட்டால் அவர்களுக்கு குறிப்பிட்ட சில துறைகளை மட்டும் ஒதுக்கியும் குறிப்பிட்ட சில வருவாய் குறைந்த வேலைகளிலே அமர்த்தப்படுகிறார்கள். சில வேலைகளில் வேலைக்குப் போகிற பெண்கள் தங்கள் குழந்தைகளையும் கூட அழைத்துச்சென்று தங்கள் கடினமான வேலைப்பளுவோடுகூட குழந்தைப் பராமரிப்பையும் கவனிக்க வேண்டியுள்ளது. அதோடு நிற்காமல் பகல் எல்லாம் வேலை செய்து விட்டு வீட்டுக்கு வந்தோம் சாப்பிட்டோம், இளைப்பாறினோம் என்று சொல்வதற்கு முடியாமல் வீட்டில் சமையல் வேலைகளையும் துணிமணி துவைக்கும் வேலைகள் போன்றவைகளையும் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள், இவைகளெல்லாம் வேதாகமத்தின் போதனைகளும் தேவனுடைய படைப்பு நோக்கங்களுக்கும் முரணானவைகள்.

3) தேசீயத் தலைவர்களாக உயர்ந்து நிற்கும் ஆணினம், பெண்மையை கௌரவித்து அவர்களுடைய பெண்மை பாதுகாக்கப்படவேண்டும் என்ற நினைவில் அவர்களுடைய தன்மைக்கேற்ற வேலைகளை மட்டும் கொடுத்துவிட்டு கடினமான பணிகளுக்கு அவர்களை ஒதுக்கி விடுகிறார்கள் வரலாற்றைப் புரட்டிப் பாத்தீர்களானால் தேசிய மட்டத்துக்கு உயர்ந்த தலைவர்களின் பட்டியலில் பெண்மணிகள் மிகமிகக் குறைவாகவே இருப்பார்கள். அவர்கள் போர்முனையில் வேலை செய்வதற்கும், மனிதர்களை மேய்க்கும் கண்காணிப்பு வேலைகளிலும் அமர்த்தப்படுவதில்லை. 1 கொரி. 11, 3-ல் ''ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறாரென்றும் ஸ்திரிகளுக்குப் புருஷன் தலையாயிருக்கிறானென்றும் கிறிஸ்துவுக்கு தேவன் தலையாயிருக்கிறாரென்றும் நீங்கள் அறிய வேண்டுமென்று விரும்புகிறேன்'' என்கிறது. இது தான் உண்மைநிலை. ஆதியில் மனிதனுக்கு துணையாகவும் அதாவது மனிதன் தனிமையில்பூரணமுடையவன் அல்ல என்பதைக் கண்டு தேவன் பெண்ணைப் படைத்தார். ஆதாமைப் பற்றி தேவன் மனிதன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்று கூறி .... ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப் பண்ணினார், அவன் நித்திரையடைந்தான். அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தை சதையினால் அடைத்தார். தேவனாகிய கர்த்தர் தான் மனுஷனில்

எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷ-னிடத்தில் கொண்டு வந்தார்.

அப்பொழுது ஆதாம் இவள் என் எலும்பில் எலும்பும், என் மாமிசத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள். இவள் மனுஷனில் எடுக்கப் பட்டபடியினால் மனுஷி எனப்படுவாள் (ஆதி 2:18-23).

படைக்கப்பட்டபொழுது ஏவாளுக்கிருந்த சமநிலை உரிமை-யைப் பாவம் பறித்துக் கொண்டது. சாத்தானுடைய வஞ்சப்பேச்-சில் மதி மயங்கி கட்டளையை மீறி விலக்கப்பட்ட கனியைப் புசித்த நாளில் அந்த சமநிலைத் தன்மை மாறுதலுக்குள்ளானது. அவள் பாவம் செய்ததுமல்லாமல் அவள் ஆதாமையும் பாவம் செய்ய இசைய வைத்தாள். அவருடைய கீழ்ப்படியாமைக்கு தண்டனையாகவும் எதைச் சொன்னாலும் வெகுளித்தனமாக நம்பிக் கொள்ளும் சுபாவத்திலிருந்து அவளுக்குப் பாதுகாப்பளிப் பதற்கு அவளை புருஷனுடைய கண்காணிப்பில் இருக்கும்படி தேவன் கொஞ்சம் தாழ்த்திப்போட்டார் ....''உன் ஆசைகளை புருஷனைப் பற்றியிருக்கும். அவன் உன்னை ஆண்டு கொள்வான்'' என்றார். (ஆதி 3:16) தேவன் கிருபையாக ஆண் வர்க்கத்துக்குத் தந்த இந்த சிலாக்கியத்தை சில ஆண்கள் தவறாகப் பயன்படுத்து வதிலேயும் பொதுவாக ஆண்கள் ஆதிக்கத்தில் இருக்கும் சமுதாய அமைப்பில் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதி காரணமாகவும், அடக்கி வைக்கப்பட்ட பெண் வர்க்கம் தங்கள் உரிமைக்காகப் போராடும் போக்கு கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து பெருகிக் கொண்டு வருகிறது.

சில காரியங்களில் அப்புரட்சி சில நன்மைகளைச் செய்திருக் கிறது என்பதை மறுக்க முடியாது. பெண்கல்வி குடும்ப வாழ்க் கைக்கு நல்ல பயன்களைக் கொடுத்திருக்கிறது. கணவன் மனைவி-மார்களுக்குள் புத்திசாலித்தனத்திலும் உணர்ச்சிகளிலும் உள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்திருக்கிறது. ஒரு படித்த பெண் சிறந்த தாயாக விளங்க முடிகிறது. குழந்தைகளுடைய தேவைகளைச் சந்திப்பதிலும் அவர்களுடைய முன்னேற்றத்திற்கு உதவுவதற்கும் பேருதவியாக இருக்கிறாள்.

பெண்கள் சில துறைகளில் வியப்பு மிக்கவகையில் செயல் பட்டுக் கொண்டிருக்கிறார்கள், மருத்துவத் துறைகளிலும் அவர்கள் ஆற்றிவருகிற சேவை போற்றத்தக்கது. இலக்கியத்துறைகளிலும்,

கலைத்துறைகளிலும் கல்வி மற்றும் ஆராய்ச்சித் துறைகளிலும் அவர்களுடைய பங்கு சிறப்பாக உள்ளது. ஆனால் பெண்ணுரிமை கோரும் இயக்கங்கள் தேவன் பெண்களை என்ன நோக்கத்திற்காக சிருஷ்டித்தாரோ அதன் எல்லையை மீறிச்செல்லுவதாக இருக்கிறது. அது பல பிரச்சனைகளை உருவாக்கிக் கொண்டு வருகிறது. இந்த வகையில் முதலில் பாதிக்கப்பட்டது குடும்ப அமைப்பு. அநேக பெண்களை ஆபீசுகளிலும் இதர பணிமனைகளிலும் பணியாற்றுபவர்கள் திருமணம் செய்து கொள்வதில் சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. புருஷன் மனைவிக்குள்ளேயே யார் பெரியவர் என்ற மனப்போக்கு வளர்ந்து வருகிறது. வெளியில் சென்று 10 மணி 12 மணி நேரம் பணியாற்றுகிற ஒரு பெண்ணுக்கு இல்லற வாழ்க்கையில் கணவன்-மனைவி உறவுக்குப் போதிய நேரம் ஒதுக்க முடிவதில்லை. அல்லது திருமணத்தின் தலையாய நோக்கத்திற்கிசைவான குடும்ப வாழ்க்கை வாழ முடிவதில்லை. தானும் சம்பாதிக்கிறோம் என்ற மமதை சில பெண்களுக்கு வந்து திருமண வாழ்க்கையின் சீரிய நோக்கத்தை குலைத்துப் போடுகிறது. நூற்றுக்கு 25 முதல் 50 சதவீத குடும்பங்களில் சண்டையும், சச்சரவும் மலிந்து வாழ்க்கை கசக்கிறது. சிலவகைகள் விவாகரத்திலே போய் முடிகிறது. அதன் விளைவாக குழந்தைகள் போதிய பராமரிப்பு இல்லாமல் அனாதைகளாகி துன்பப்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் விரக்தி மேலீட்டால் சமுதாயத்தில் காணப்படும் தீமையான பழக்க வழக்கங்களாகிய மது அருந்துதல், போதை மருந்துக்கு அடிமையாதல் இன்னும் எத்தனையோ தீமைகளுக்கு இலக்காகிறார்கள்.

குடும்பம் என்பது சமுதாயத்தின் அஸ்திபாரம். அஸ்திபாரமே நிலைகுலையும் போது கட்டிடமாகிய சமுதாயமும், நாடும் சீரழிவது தவிர்க்க முடியாதாகி விடுகிறது. தேவன் திட்டமிட்ட குடும்ப அமைப்பு சீர்குலையாமலிருக்க பெண்கள் தங்களுடைய பொறுப்புகளை உணர்ந்து தங்களுடைய கடமையில் தவறாமல் இருக்க வேண்டும். தேவன் தம்முடைய சர்வ ஞானத்தால் கவனமாகச் செய்திருக்கிற ஒழுங்கு முறைகளை வேதாகமத்தில் பரிசுத்த ஆவியானவர் பரிசுத்த மனிதனைக் கொண்டு எழுதி வைத்திருக்கிறார். அதற்கு மிஞ்சிய ஒரு திட்டத்தை எந்த ஒரு மனிதனும் வகுத்துத் தந்துவிட முடியாது. ஆகவே, சகோதரிகளே தேவனுடைய திட்டத்தை ஏற்றுக் கொண்டு திருப்தி அடையலாம்.

பெட்டிபார்ட்டன் சோட்

# அவர் நன்றி கூறினார்!

ஞாயிறு ஆராதனையில் கர்த்தரின் பந்திக்கு முக்கிய பங்கு உள்ளது. கர்த்தரின் பந்தியை நடத்தும் சில சகோதரர்கள் நீண்ட, அருமையான ஜெபங்களை செய்கிறார்கள். என்றாலும், பந்தியில் வைக்கப்பட்ட அப்பம், இரசம் இவற்றிற்காக நன்றி செலுத்தத் தவறிவிடுகின்றனர். இதற்குக் காரணம் அலட்சியமா அல்லது அறியாமையா எனத் தெரியவில்லை. இரண்டுமே திருத்திக் கொள்ளப்பட வேண்டிய தவறுகளாகும். ஆராதனையை வழி நடத்தும் சகோதரர்கள் மிகுந்த கவனத்துடனும், பயபக்தியுடனும் நடந்து கொள்ள வேண்டியவர்களாயிருக்கின்றனர். ஏனோ தானோ என்ற அலட்சிய மனப்போக்கால் ஆராதனை அர்த்தமற்ற ஒரு சடங்காக மாறும் போது தேவனும் ஆராதனையில் பங்கு பெறும் விசுவாசிகளும் பிரியப்படமாட்டார்கள்.

**அப்போஸ்தலன் பவுல் கூறுவதைக் கேளுங்கள் :**

"கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதைப்பிட்டு; நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவு-கூறும்படி இதைச் செய்யுங்கள் என்றார் "(கொரி. 11: 23, 24)

"பின்பு அவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி அதைப்பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து: இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னைநினைவு கூறும்படி இதைச் செய்யுங்கள் என்றார்" என லூக்காவும் எழுதுகிறார். (லூக். 22: 19).

மத்தேயு எழுதிய சுவிஷேசத்திலேயும் இது பற்றி படிக்கிறோம் "அவர்கள் போஜனம் பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து, அதைப்பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து : நீங்கள் வாங்கி புசியுங்கள்; இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அவர்களுக்கு கொடுத்து: நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள்; இது பாவ மன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமா-யிருக்கிறது." (மத் 26: 28-28) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அதே காரியத்தை மாற்கு எழுதும்போது ''அவர்கள் போஜனம் பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து அதைப்பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார், பின்பு பாத்திரத்தையும் எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி, அதை அவர்களுக்குக் கொடுத்தார். அவர்கள் எல்லோரும் அதிலே பானம் பண்ணினார்கள்'' (மாற்கு 14:22, 25) என்கிறார்

மேலே குறிப்பிட்ட எல்லா வேத வசனங்களும் நமக்கு உணர்த்துவது; **அப்பத்திற்காகவும், இரசத்திற்காகவும் இயேசு நன்றி தெரிவித்தார்.** என்பதை அல்லவா? கர்த்தரின் பந்தியை நடத்த அழைக்கப்படும் சகோதரர்களும் இவ்வாறே நன்றி கூறவேண்டும். தனது ஒரே குமாரனாகிய இயேசுவை நமது பாவங்களுக்குப் பலியாகத்தந்த தேவனின் அளவற்ற அன்பிற்காகவும், இன்றும் தேவன் நமக்களித்த சகல உபகாரங்களுக்காகவும் நன்றி தெரிவித்து நீண்ட ஒரு ஜெபத்தை இந்த சந்தர்ப்பத்தில் செய்வது ஒன்றும் பாவமல்ல; ஆனாலும் இயேசுவின் சரீரம், இரத்தம் ஆகியவற்றின் நினைவாகத் தரப்பட்டுள்ள அப்பத்திற்கும் இரசத்திற்கும் நன்றி செலுத்தாமல் நீண்ட ஜெபம் செய்தால் அப்பத்துக்கும் திராட்சை ரசத்துக்கும் உள்ள முக்கியத்துவம் மறந்து கூடப் போகலாமே

விருந்துக்கு அழைக்கப்பட்ட மனிதன் ஒருவன், விருந்து படைக்கப்பட்ட மேஜையின் முன் நின்று ஜெபம் செய்தான். தேவன் தந்த நல்ல விளைச்சலுக்காகவும், உற்றார், உறவினர், நண்பர்கள் குடும்பங்களிலே சகலருக்கும் நல்ல சுகமளித்த கருணைக்காகவும், விருந்து படைத்தவர்களின் நலன்களுக்காகவும் அந்த நீண்ட ஜெபம் உருக்கமாகவும், உணர்ச்சி பூர்வமாகவும் அமைந்திருந்தது என்ற போதிலும் அந்த விருந்திற்காக அவன் நன்றி சொல்லத் தவறி விட்டாரே! கர்த்தரின் பந்தியை நடத்த வரும் சகோதரர்களில் சிலர் மேற்கூறிய மனிதனின் ஜெபத்தைத்தான் நினைப்பூட்டுகின்றனர்.

பல வேளைகளிலே, ''இந்த அப்பத்தை (அல்லது) இரசத்தை ஆசீர்வதித்தருளும்'? என தேவனை நோக்கி ஜெபம் செய்யும் சகோதரர்களைக் காணுகிறோம். ஏதோ தனிப்பட்ட ஆசீர்வாதத்தை அப்பத்தின் மேலே தேவன் ஊற்ற வேண்டுமா? ஆனால், இயேசு ''அப்பத்தை எடுத்து அதற்காக நன்றி (ஸ்தோத்திரம்) சொன்

னார் என்ற எளிய செயலே வசனங்களில் காணப்படுகிறது அப்பத்திற்காகவும் இரசத்திற்காகவும் நன்றி சொல்ல வேண்டுமென்பதைத் தவிர, அவற்றைத் தேவன் ஆசீர்வதிக்க வேண்டுமென்று ஜெபிக்க வசனங்கள் கூறவில்லை.

பல ஆண்டுகளுக்கு முன் ஒரு மூத்த சகோதரர், கர்த்தரின் பந்தியைப் பற்றி கூறியது என் நினைவுக்கு வருகிறது. ஒரு சகோதரன் அப்பத்திற்கும் இரசத்திற்கும் நன்றி செலுத்தாமல் நீண்ட ஜெபம் செய்வதை விட, ''என் பரலோகத் தந்தையே! இந்த அப்பத்திற்காக இயேசுவின் நாமத்திலே நன்றி சொல்லுகிறேன்_ ஆமென்'' என்ற சிறு ஜெபம் பொருத்தமானதாக இருக்கும் என அவர் கூறினார். எனவே, கர்த்தரின் பந்தியிலே நன்றி சொல்ல நாம் கடமைப்பட்டுள்ளோம்.

ஆராதனையில் ஜெபம் செய்ய வேண்டிய பிற சந்தர்ப்பங்களில், தேவனிடமிருந்து நாம் பெற்று வரும் சகல ஆசீர்வாதங்களுக்காகவும் இன்ன பிற காரியங்களுக்காகவும் நாம் நன்றி சொல்லலாம்!

கர்த்தரின் பந்தியை நடத்த அழைக்கப்பட்ட சகோதரனே; இந்த தவறை நீங்கள் உணர்ந்து கொண்டால், அதை ஏற்றுக் கொண்டு திருத்திக் கொள்ளுங்கள். அப்பொழுது தேவன் உங்கள் பேரில் பிரியப்படுவார்.

---

## கர்த்தரை ருசித்துப் பார்

கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள். அவர் மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.

கர்த்தருடைய பரிசுத்தவான்களே, அவருக்குப் பயந்திருங்கள் அவருக்குப் பயந்தவர்களுக்கு குறைவில்லை.

சிங்கக் குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவு படாது.

சங்கீதம் 34:8-10

---

# திரும்பிச் செல்வோம் வாரீர் !

''முதல் முதல் அந்தியோகியாவிலே சீடர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று''

— அப்போஸ்தலர் நடபடி 11:26

சில ஆண்டுகளுக்கு முன்னர் 'சிறந்த வீட்டு பராமரிப்பு, என்ற அமெரிக்க நாட்டு பத்திரிகை ''அமெரிக்காவில் மதம்'' என்னும் தலைப்பில் 16 ஆண்டுகளாக ஆய்வு செய்யப்பட்ட ஒரு கட்டுரையை வெளியிட்டது. வித்தியாசமான வினோதமான, மூடநம்பிக்கை களின் அடிப்படையில் உருவாகிய, சிறிதும் பெரிதுமான 1200 பிரிவுகள் தங்களை கிறிஸ்தவர்கள் எனக் கூறுவதாக அக்கட்டுரை தெரிவித்தது.

மாறுபாடான பல போதனைகளை இன்று கேட்டுவரும் மக்கள் எதை நம்புவது எனத் தெரியாமல் திணறிக் கொண்டிருக் கிறார்கள். எந்த சபை சரியானது, அல்லது எல்லா சபைகளுமே ஒன்று தானா? நான் எந்த சபையில் அங்கம் வகிக்கவேண்டும்? .... என்ற வினாக்கள் எழுகின்றன. காளான்களைப் போல, பிரிவினை சபைகள் பெருகி பலுகி கிடக்கின்ற காரணத்தால் பலர் கிறிஸ்தவத்தையே வெறுத்து ஒதுங்கி விடுகின்றனர் அல்லது ஒதுக்கி வைத்து விடுகின்றனர். கிறிஸ்தவத்தின் வல்லமையும், உலகத்தில் ஒழுக்கமான வாழ்க்கைக்கு அதன் அவசியமும் இன்றைய பிரிவினை சபைகளின் தோற்றத்தால் கவலைக்கிடமான நிலையில் மறைந்து மங்கி வருகின்றன. இந்த பிரிவினைகளின் விலையோ மிக மிக அதிகம். பொறாமை, சந்தேகப்பார்வை, பிரிவுகளுக்கிடையே பரஸ் பர வெறுப்பு. இவற்றிற்கெல்லாம் மேலாக, பிரிவினை சபைகளின் குழப்பமான போதனைகள் லட்சக்கணக்கான மக்களை கிறிஸ்து வின் அருகில் வரவிடாமல் ஓடவைத்துள்ளன.

இந்த நிலை, இதுவரை பலர் கேட்டிராத கேள்விகளைக் கேட்கத் தூண்டுகிறது. இயேசு கிறிஸ்து கட்டிய ஒரே சபையில் மட் டுமே நாம் அங்கம் வகிக்க முடியாதா? அதாவது, பிரிவினை சபை களின் பாரம்பரிய கொள்கைகளில் சிக்கித் தவிக்காமல், இயேசு கிறிஸ்துவின் உபதேசத்தை மட்டுமே பின்பற்றிச் செல்ல இயலாதா? பெயருக்கு மட்டும் கிறிஸ்தவன் என்று சொல்லிக் கொள்ளுவது தேவையா? பிரிவினையற்ற கிறிஸ்தவம் அடைய முடியாத ஒன்றா அல்லது, கிறிஸ்துவின் ஒரே சபை நடைமுறைக்கு வராத கனவா? என்பவைகள் அவைகளில் சில.

மத் உலகிலே இன்று நிலைத்துள்ள பிரிவினை சபைகளின் வரலாறுகளை, சிறிது பின் நோக்கி பார்க்க வேண்டிய தருணம் இதோ வந்து விட்டது. இந்த சபைகள் எல்லாம் எங்கிருந்து, எப்பொழுது யாரால் ஏன் வந்தன? இவ்வளவு மோசமாக நாம் பிரிந்து கிடப்பது எப்படி? தேவனுக்கு இந்நிலை மகிழ்ச்சி தரக் கூடியதா? புற மதஸ்தர்கள் நம்மைப் பற்றி என்ன நினைக்கிறார்கள்? கிறிஸ்துவை பின் பற்றுவோர் எல்லோரும் ஒன்றுபட்டு ஒரே சபையாக இயங்க வழியே கிடையாதா? எல்லாவற்றிற்கும் மேலாக தொழுதிட, பிரிவினை லேபிள் எதுவும் இல்லாத ''கிறிஸ்தவனாக'' மட்டுமே இருப்பது எப்படி? இக்கேள்விகளுக்கெல்லாம் இங்கு விடை காணப் போகிறோம்.

## புதிய ஏற்பாட்டு காலத்தில் ஒரே ஒரு சபை மட்டுமே இருந்தது.

புதிய ஏற்பாட்டு நிலை பற்றி அப்போஸ்தலனாகிய பவுல், எபேசியர் 4:4-6 வசனங்களில் கீழ்க் கண்டவாறு கூறுகிறார்.

'உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டது போல, **ஒரே சரீரமும்**, ஒரே ஆவியும் உண்டு ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும்' எல்லோருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லோர் மேலும், எல்லோரோடும் உங்கள் எல்லோருக்குள்ளும் இருக்கிறவர்'

ஒரே சரீரம் என பவுல் இங்கு குறிப்பிடுவது சபையை நினைவில் கொண்டு தான் என்பதை, அடுத்து எபேசியருக்கு எழுதிய நிருபம் 1;22-23 வசனங்களில் காணலாம் அதாவது;

''எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்படுத்தி, எல்லாவற்றையும், எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய **சரீரமான சபைக்கு** அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்'' அந்த சரீரமாகிய ஒரே சபையில் அங்கத்தினர்கள் **கிறிஸ்தவர்கள்** என்று மட்டுமே அழைக்கப்பட்டனர் என்பதை அப்போஸ்தலர் நடபடி 11:26ம் வசனத்தில் காணலாம்

இயேசு கிறிஸ்துவின் விருப்பம், எல்லா மக்களும் ஒன்று பட்டிருக்க வேண்டும் என்பதே. தன்னுடைய சபையைக்கட்டுவதாகஅவர் கூறிய போது, ஒரே சபையைத் தான் கூறினார். மத்தேயு 16:18ம் வசனத்தை வாசித்துப் பாருங்கள். சபையை என்று ஒருமையில் சொல்லப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். மேலும், இயேசு கிறிஸ்து

சபையை தம்முடைய சொந்த இரத்தத்தை சிந்தி சம்பாதித்துக் கொண்டார் என அப்போஸ்தலர் நடபடி 20:28- ல் கூறப்பட்டுள்ளது. மகிமையுள்ள சபையாக அதை தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கு தம்மைத்தாமே அதற்கு ஒப்புக்கொடுத்தார் என எபேசியர் 5:26, 27 வசனங்களில் காணலாம். பவுல் ரோமாபுரியிலுள்ள சபையாருக்கு எழுதுகிறபொழுது 'கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்' என ரோமர் 16:16ல் கூறியுள்ளார். எனவே கிறிஸ்து ஒரே சபையைக் கட்டினார் அது **கிறிஸ்துவின் சபை** என தெளிவாக கூறப்படடுள்ளது.

அவருடைய சீடர்களின் ஒற்றுமைக்காகவும், அவருடைய உபதேசங்களை ஏற்றுக் கொள்கிறவர்கள் எல்லோரும் ஒன்றாக இருக்கும்படியாகவும் இயேசு கெத்செமெனே தோட்டத்தில்மனதுருகி ஜெபித்தார். யோவான் 17:20,21ம் வசனங்களைப் பாருங்கள்: ''அவர்களெல்லோரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல, அவர்களெல்லோரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்கிறேன்'' என ஜெபித்தார். எபேசியர் 2:13-16 வசனங்களிலும் ஒரே சரீரமாகிய சபையைப்பற்றி பவுல் குறிப்பிடுகிறார்.

பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு, புதிய ஏற்பாட்டை எழுதிய எல்லோருமே பிரிவினையை கடுமையாக கண்டித்திருக்கின்றனர் 1 கொரிந்தியர் 1:10 ம் வசனத்தில் பவுல் கூறுகிறார். ''சகோதரர்களே நீங்களெல்லோரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏக மனதும், ஏக யோசனையும் உள்ளவர்களாய் சீர் பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே, உங்களுக்கு புத்தி சொல்லுகிறேன்'' கலாத்தியர் 5:20- வசனத்தில், பிரிவினையானது மாம்சத்தின் கிரியை என தேவனின் வார்த்தை கண்டிக்கிறது. 2 பேதுரு 2:1 ம் வசனத்தில், கேட்டு கேதுவான வேதப்புரட்டுக்களை, தந்திரமாய் நுழையப்பண்ணி தங்களை கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்கு தீவிரமான அழிவை வருவித்துக் கொள்ளும் கள்ள தீர்க்கதரிசிகளைப் பற்றி குறிப்பிடுகிறார்.

1. புதிய ஏற்பாட்டின்படி, சபை ஒன்றே என்பது தெளிவாகத் தெரிவதால் எல்லா பிரிவினை சபைகளும் கண்டிக்கதக்கவை.

2. எல்லா 'சபைகளும் ஒன்றே' என்ற கூற்று தவறானது.

3. ''விருப்பமான ஏதாவது ஒரு சபைக்குப் போகலாம்'' என ஒருவர் சொல்வது, ஒன்று தவறான போதனையின் விளைவாக இருக்கலாம் அல்லது அவர் தேவனின் விருப்பத்தைப் பற்றி சிறிதும் கவலையற்ற நபராக இருக்கலாம்.

4. உண்மையான சபை ஒன்றே என்பது உறுதியானபின் மற்ற சபைப் பிரிவுகள் எல்லாம் போலிகள் என்பது சிந்திக்க விரும்புகிற ஒருவருக்கு விளங்காமற் போகாது.

5. புதிய ஏற்பாட்டு சபை ஒன்றே என்பதால், இரட்சிக்கப்பட வேண்டும் என்ற பாரம் உள்ள எல்லோரும் அதில் தானே அங்கம் வகிக்க வேண்டும்?

எவ்வித விரோதமனப்பான்மையோ, அல்லதுவெறுப்புஉணர்வோ இன்றி உங்கள் பேரில் அன்பும்அக்கறையும் கொண்டு புதிய ஏற்பாட்டில் காணப்படும் சபையைப்பற்றி நான் கூறுவதை தயவுசெய்து வேதாகமத்துடன் ஒத்துப் பார்த்து சரியாக இருப்பின் ஏற்றுக்கொள்ளுங்கள் அப் 17:11, அது பிரிவினையற்றகிறிஸ்துவை நடுநாயகராக கொண்டதேவனின்அநாதித் தீர்மானங்களின் நிறைவேற்றலாக ஒரே சிந்தையாய் ஆணும்பெண்ணும் சகோதரத்துவ பாசத்தில் இணைந்த ஒரு அற்புதமான தெய்வீகஅமைப்பு என்பதை நீங்கள் காணமுடியும்

## பிரிவினை சபைகள் வளர்ந்த வரலாறு உங்களுக்குத் தெரியுமா ?

இன்றைய மதப்பிரிவினைகள் வேர்விட்டு வளரத்தொடங்கிய காலத்தை, வரலாற்று ஆசிரியர்கள் **பெரும் வீழ்ச்சியின் காலம்** அல்லது **இருண்டகாலம்** என குறிப்பிடுகின்றார். புதியஏற்பாட்டு காலத்திலேயே, சபையைத் துண்டாட சிலர் முயன்றனர். இதை பவுல் வன்மையாகக் கண்டித்து உணர்த்தினார். (1 கொரி 1;10-17 அப்போஸ்தலர்களும் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு புதிய ஏற்பாட்டை எழுதியவர்களும், இதை கண்டித்துள்ளனர். கலாத்தியர் 1:6-9 வசனங்களிலும், 2 பேதுரு 2:1ம் வசனத்திலும் எச்சரித்துள்ளனர். 2 தீமோத்தேயு 2: 18-ம் வசன இறுதியில், அப்போஸ்தலர் பவுல் மீண்டுமாக எச்சரிக்கிறார்.

''........ இவர்கள் உண்மையைவிட்டு விலகி சிலருடைய விசுவாசத்தையே தகர்த்து விடுகிறார்கள். தொடர்ந்து 2 தீமோத்தேயு 4; 3,4 வசனங்களில் கூறுகிறார், ''ஒரு காலம் வரும் அப்-

போது மக்கள் நலமிக்க போதனையைத் தாங்க மாட்டார்கள், மாறாக செவித்தினவு கொண்டவர்களாய்த் தங்கள் மனம் போன போக்கிலே எண்ணிறந்த போதகர்களைத் திரட்டிக் கொள்வர் உண்மைக்குச் செவி கொடுக்க மறுத்து, கட்டுக் கதைகளுக்கு செவி கொடுப்பர்''. (திருத்திய மொழி பெயர்ப்பு)

எபேசுவிலுள்ள புதிய ஏற்பாட்டுச் சபையை எச்சரித்து அப்போஸ்தலர் நடபடி 20 : 20-30 வசனங்களில் பவுல் கூறுகிறார்' ''நான் போனபின்பு மந்தையை தப்பிவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி சீடர்களை தங்களிடத்தில் இழுத்துக் கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்கள் என்று அறிந்திருக்கிறேன்''.

மாறுபாடான போதனைகளும், வீழ்ச்சியும் பவுல் கூறியவாறு கி.பி 100 முதல் 300 வரையிலான காலகட்டத்தில் தோன்றி, புதிய ஏற்பாட்டின் முக்கியத்துவத்தை சிறுது சிறிதாக மங்கச் செய்து விட்டன. மாறுபாடான போதனைகள் தந்திரமாக ஒவ்வொரு கட்டத்திலும் புகுத்தப்பட்டு வந்தன.

1. புதியஏற்பாட்டுக்கால எளியசுதந்திரமான, சபை நிர்வாகமுறை கொஞ்சம்கொஞ்சமாக பிஷப், ஆர்ச்பிஷப் என்றும் கடைசியாக 7-வது நூற்றாண்டு துவக்கமுதல் ''போப்'' என்று மனிதனால் உருவாக்கிய பதவிகளால் மாற்றப்பட்டு இறுதியில் பறித்துக் கொள்ளப்பட்டன.

2. மனிதனுடைய பாரம்பரியங்கள், தேவனின் வார்த்தைக்கு மேலாக மதிக்கப்பட்டு, மனித ஞானத்தால் உருவாக்கப்பட்ட திட்டங்கள் புகுத்தப்பட்டன.

3. புதிய ஏற்பாட்டு சபையின் எளிய வழிபாட்டு முறைகள் மாற்றப்பட்டு, மனிதன் ஏற்படுத்திய சடங்குகளுடன் இலத்தீன் மொழியில் பூசை (MASS), என்ற பெயரில் விக்கிரகங்களை வணங்குதல், ஆராதனையில் வாத்திய இசைக்கருவிகள் போன்றவைகள் இடம் பெற்றன.

4. ஜென்ம பாவம் என்ற ஒரு கொள்கையை உருவாக்கி, குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் என்ற புதுமுறை புகுத்தப்பட்டு தண்ணீரைத் தெளித்து சபை அங்கத்தினர்களாக்கும் முறையில் தவறான மாற்றம் செய்யப்பட்டது.

5. போதகர்கள் தங்களை ''சங்கைக்குரிய ''அதி சங்கைக்குரிய'' என்றெல்லாம் அடைமொழிகளை சேர்த்து பெருமையுடன் அழைத்துக் கொண்டதுடன், சபை அங்கத்தினர்களிடமிருந்து தங்களை வித்தியாசப்படுத்திக்காட்டும் ஆடைகளையும் அணிந்து கொண்டனர்.

படிப்படியாக நடைபெற்றுவந்த இந்த மாபெரும் வீழ்ச்சியை ஆண்டுவாரியாகக் கீழே காணலாம்.

கி.பி. 150-ல் தலைமை பிஷப் தோன்றினார்!

கி.பி. 251-ல் தண்ணீர் தெளித்து ஞானஸ்நானம் அறிமுகம்;

கி.பி. 404-ல் விக்கிர வழிபாடு புகுத்தப்பட்டது;

கி.பி. 607-ல் முதல் போப் உருவாக்கப்பட்டார்.

அதாவது, ரோமன் கத்தோலிக்க மதம் தோன்றியது. அவர்கள் முதலாம் நூற்றாண்டில் மரித்த, இராயப்பர் என கத்தோலிக்கர்களால் அழைக்கப்படும் பேதுருவை முதலாவது போப் என சொல்வது எவ்வளவு பெரிய சரித்திர மோசடி என்பதைச் காணலாம். 'போப்' திருமணம் செய்து கொள்வது கூடாது என்று போதிக்கும் இவர்கள், திருமணமாகி குடும்பம் நடத்திய பேதருவை ''முதலாவது போப்'' என்று கூறிக் கொள்வது எப்படி? (மத் 8:14, மாற்கு 1-30 நூக் 4:38; 1 கொரி 9:5)

கி.பி. 666-ல் ஆராதனையில் வாத்தியக் கருவிகளை அறிமுகம் செய்தனர்;

6. கி.பி.800-ல் சபையும் (அதாவது கத்தோலிக்க சபையும்) அரசும் இணைந்து வேதத்துக்குப் புறம்பாக செயல்பட்டன மதத்தின் பெயரால் இவர்கள் நடத்திய கொடுங்கோலாட்சியையும் செய்த பித்தலாட்டங்களையும் அம்பலப்படுத்தி. புதிய ஏற்பாட்டுநடை முறைகளுக்குத் திருப்பும் அவசியம் பற்றி மக்கள் மன்றத்தில் தைரியமாக எடுத்துரைத்த பலர் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர்.

7. கி.பி. 1054-ல் கிரீக். ரோமன் சபைகள் என்று கத்தோலிக் மார்க்கத்தார்களிடையே பிளவு ஏற்பட்டு பிரிந்தனர்.

அடுத்து வந்த நூற்றாண்டுகளில் மேலும்பிரிவுகள் ஏற்பட்டு மாறுபாடான வழிபாட்டு முறைகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டு,

கிறிஸ்தவம் வீழ்ச்சியடைந்து, உலக காரியங்களும் ஊழல்களும் மலிந்த மத அமைப்புகள் தோன்றலாயின.

16-ஆம் நூற்றாண்டில், மேற்சொன்ன கேடுகளைக் களைந்தெரிந்து, புதிய ஏற்பாட்டு சபைக்கு மீண்டும் செல்ல **ஜான்வைகுளிப் ஜான்ஹஸ், ஜெரோம்** போன்றோர் கிளர்ந்தெழுந்தனர், மதமும் அரசும் இணைந்து வலிமை மிக்க சக்தியாக இயங்கிய அந்த கால கட்டத்தில் சபையின் ஒழுங்குகளிலிருந்து பிரிந்து எங்கோ வந்து-விட்ட நாம், மீண்டுமாக திரும்பிச் செல்லுவோம்'' எனக் குரல் எழுப்பி அறைகூவல் விட்ட, மேற்சொன்ன கிறிஸ்துவின் உண்மை-யுள்ள ஊழியர்கள், அந்தோ! தங்கள் உயிரையே இழக்கவேண்டி வந்தது.

பிற்காலத்தில் தோன்றிய **மார்டின்லூதர்**. ''மதத்தலை-வர்களின் தடைகள் இன்றி, எல்லோரும் பரிசுத்த வேதாகமத்தைப் படித்து, அதன்வழி நடக்கவேண்டும்'' என்று வற்புறுத்தினார்.

அவரைத் தொடர்ந்து பல நூற்றண்டுகளாக மாறுபாடான மனிதக் கோட்பாடுகளால் அமுங்கிக் கிடந்த புதிய ஏற்பாட்டுச் சபைக்கு, மீண்டுமாக உயிர்கொடுக்க ஒருஇயக்கம் தோன்றிற்று இவ் வியக்கத்தில் **உல்ரிச்ஸ்விங்லிஜான்கால்வின் ஜான்நாக்ஸ்** போன்றோர் தீவிரப் பங்கேற்றனர். இவர்களுக்குப் பின் தோன்றிய **ஜான்வெஸ்லி** மனிதர்கள் கடைபிடித்து வந்த உயிரற்ற சடங்கு களை மாற்றி, புதிய ஏற்பாட்டு சபைக்கு உயிரூட்ட முயன்றார்.

இவர்கள் எல்லோருாம மரியாதைக்குரிய பெரிய மனிதர்கள். நாம் இவர்களுக்கு மிகவும் கடன்பட்டுள்ளோம். இருண்டகாலத்தில் ஒளியேற்றபாடுபட்டஇவர்களை நாம்வாழ்த்துகிறோம்! ஆனால் பரி பரிதாபம்! காலத்தின் கட்டாயத்தாலும் சூழ்நிலையாலும் இதற்கு மேல் இவர்களால் செல்ல முடியவில்லை. காலப்போக்கில் மீண்டும் புதிய புதிய மனித சபை பிரிவுகள் உருவாக இந்த நல்ல மனி-தர்களின் பெயர்களே பயன் படுத்தப்பட்டன. என்பதுதான் வேதனையைத் தருகிறது. இவர்களில் எவருமே புதிய பிரிவுகளை ஏற்படுத்தும் நோக்கில் ஆரம்பத்தில் இயங்கவில்லை, பிரிவினை சபைக்கு உதவும் எண்ணமும் இவர்களிடம் கிஞ்சித்தும் கிடையாது. ஆனால் துரதிஷ்டமாக இவர்களுடைய மரணத்துக்குப் பிறகு இவர்களுக்கு மரியாதை செலுத்துகிறதாக நினைத்துக் கொண்டு இவர்களுடைய ஆதரவாளர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுவதை

விட்டு விட்டு, மேலே குறிப்பிட்ட மனிதர்களை பின்பற்றலாயி-னர். இப்படியாக புதுப் புது பிரிவு சபைகள் தோன்றலாயின. மார்ட்டின்லூதரைப் பின்பற்றியவர்கள் லூதரன் சபை என்றும் கால்வின் கருத்துகளால் கவரப்பட்டவர் பாப்டிஸ்ட் சபை என்றும் ஜான் நாகஸ் வழியாக பிரஸ் பிடேரியன் சபையும் ஜான் வெஸ்லியின் ஆதரவாளர்கள் மெதடிஸ்த் சபை, எனவும் இங்கிலாந்து நாட்டில், இவ்வியக்கம் ஆங்கில சபை என்றும் பல பிரிவுகளாக உருவாயின.

காலம் செல்லச் செல்ல இப்பிரிவுகளில் உட்பிரிவுகள் பல முளைத்து அவைகளிலும் பிளவுகள் ஏற்பட்டு, இன்றைய தினம் அமெரிக்காவில் மட்டும் 1200 பிரிவுகள் உள்ளன. இந்தியா-விலும், உலகமெங்கிலும் எண்ணிலடங்கா பிரிவு (அல்லது பிளவு) சபைகள் உள்ளன. இவ்வாறாக ஆதிசபையை உயிர்ப்பிக்கும் இயக்கம் ஸ்தம்பித்துப் போனது மட்டுமில்லாமல் கிறிஸ்தவம் பல கூறுகளாக சிதைந்து ஒன்றுக்கொன்று இணக்கமில்லாமல் முரண்-பாடாகச் செயல்பட ஆரம்பித்தன.

மனிதனால் தோற்றுவிக்கப்பட்ட சபை பிரிவுகளுக்கிடையே வெடித்த பொறாமை, வெறுப்பு, அடிதடி, சட்டப் பிரச்சினைகளின் விளைவாகத் தோன்றிய ஏமாற்றத்தின் உச்ச கட்டத்தில், கடந்த நூற்றாண்டின் துவக்கத்தில்அமெரிக்காவில் ஒரு மாபெரும் மறு-மலர்ச்சி இயக்கம் உதயமாயிற்று.

சபை பிரிவுகளை ஒழித்துக் கட்டும் மார்க்கம், என்பது மீண்டும் ஒரு புதிய பிரிவை ஏற்படுத்துவது அல்ல என்றும் மாறாக மனிதரால் உருவாக்கப்பட்டு, சபைகள் என்ற பெயரில் இயங்கும் அமைப்புகள் அனைத்தையும் முற்றிலும் புறக்கணித்து விட்டு, புதிய ஏற்பாட்டு சபைக்குத் திரும்புவது தான் ஒரே சரியான வழி என இந்த இயக்கம் ஏற்றுக்கொண்டு, முதலாம் நூற-றாண்டு புதிய ஏற்பாட்டு சபையின் சகல மகிமைகளையும் பூரணமான பரிசுத்தத்தையும் மீண்டும் கொண்டு வரப் பாடு-பட்டனர்.

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை அதாவது, கிறிஸ்துவின் சபையை மீண்டும் ஏற்படுத்தும் பணியில், பல பிரிவு சபைகளின் தலைவர்களும் தங்கள் தங்கள் பிரிவுகளை உதறிவிட்டு, உற்சாக-மாகப் பங்கேற்றனர்.

வட கரோலினாவில் **மெதடிஸ்ட்** சபையின் புகழ் பெற்ற ஊழியராய் இருந்த **ஜேம்ஸ் ஒ கெல்லி** என்பவர், 1793-ல் சபையை உதறி தள்ளிவிட்டு புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தைக் கொண்டுவர உழைத்தார். இவருடைய முயற்சியால் 5000 பேருக்கும் அதிகமான சகோதரர்கள் தங்களைக் **கிறிஸ்தவர்கள்** என்று மட்டுமே அழைக்கவும் **புதிய ஏற்பாட்டு உபதேசச் சட்டங்களை** மட்டுமே தங்கள் சபையில் சட்ட திட்டமாகவும் ஏற்றுக் கொண்டனர்.

1801-ம் ஆண்டு துவக்கத்தில், புதிய இங்கிலாந்தில் **எலியாஸ்மித், அப்னார் ஜோன்ஸ்** என்ற இரு பாப்டிஸ்ட் போதகர்கள் தங்கள் பிரிவினை சபையை உதறிவிட்டு கிறிஸ்துவின் சரீரமாகிய ஒரே சபைக்காக வேலை செய்யத் தொடங்கினார்கள்.

கென்டுக்கி மாநிலத்தில், **பர்ட்டன் ஸ்டோன்** என்ற பிரஸ்பிட்டேரியன் போதகர், அதே சபையைச் சார்ந்த மற்றும் சில போதகர்களுடன் இணைந்து **ஸ்பிரிங்பீல்ட் பிரஸ்பிட்டேரியன்** சபையை விட்டு வெளியேறி, ''வேதாகமத்தைத் தவிர வேறு மனித சட்ட திட்டங்களோ, அல்லது கிறிஸ்தவன் என்ற பெயரைத் தவிர வேறு எந்த பெயருமோ நமக்குக் கூடாது'' என அறிவித்து, புதிய ஏற்பாட்டு சபையை மீண்டும் கொண்டு வரும் பணியில் தங்களை அர்பணித்தார்கள்.

**ஸ்பிரிங்பீல்ட் பிரஸ்பிட்டேரியன்** சபையின் கடைசி உயில் என அவர்கள் வெளியிட்ட ஒரு பிரபலமான தஸ்தாவேஜு அறிவிப்பதைக் கேளுங்கள்.

''இந்த சபை (ஸ்பீரிங்பீல்டு பிரஸ் பிட்டேரியன்) மடிந்துபோகவும் கலைக்கப்பட்டு, கிறிஸ்துவின் சபையிலே இணையவும் நாங்கள் தீர்மானிக்கிறோம். ஏனென்றால், நாம் ஒரே நம்பிக்கையில் அழைக்கப்பட்டிருப்பது போல, ஒரே சரீரமும் ஒரே ஆவியும்தான் உண்டு. மோட்சம் செல்ல,தங்களின்ஒரேமார்க்கமாகமக்கள்இனிகிறிஸ்துவின் நற்செய்தியை (பைபிளை) மட்டுமே ஏற்றுக்கொள்ள நாங்கள் தீர்மானிக்கிறோம். கிறிஸ்துவின் நற்செய்திக்குப் போட்டியாகமுளைத்த இதர எல்லா மனித சட்டதிட்டங்களையும், விரும்பினால், தீயிலிட்டு கொளுத்துவோம். மனிதன் இயற்றிய பலமதச் சடங்குகள், சட்ட புத்தகங்கள் வழியாக நரகத்திற்கு செல்வதை விட்டு, ஒரே வேதாகமத்தை மட்டும் நமது இரட்சிப்புக்கு ஏற்றுக்கொள்வோம்''.

இவ்வெழுச்சி காரணமாக விரைவிலேயே ஆயிரக்கணக்கான மக்கள் மனித சபை பிரிவுகளை உதறிவிட்டு **பார்ட்டன்ஸ்டோன்** அவர்களைப் பின்பற்றி, கிறிஸ்தவர்கள் ஆனார்கள்.

மறுமலர்ச்சி இயக்கத்தில் வெகுமுக்கியமான நபர்கள் **தாமஸ் கேம்பல், அலெக்சாண்டர்கேம்பல்** ஆகியஇருவர் இவர்கள் தகப்பனும் மகனும் ஆவர். அயர்லாந்து நாட்டிலிருந்து இவர்கள் 1807, 1809ம் ஆண்டுகளில் குடிபெயர்ந்து அமெரிக்காவுக்கு வந்தனர். அவர்கள் வெளியிட்ட அறிக்கையின் இறுதிப்பகுதி மிகப் பிரசித்தி பெற்ற ஒன்றாகும். அதாவது **''பைபிள் எதைப்பேசுகிறதோ அதை மட்டுமே பேசுவோம்; அது பேசாத எதையும் நாம் பேசமாட்டோம்''.**

பிரஸ்பிட்டேரியன் சபை, பின்னர் பாப்டிஸ்ட் சபைகளில் அங்கம் வகித்த இவ்விருவரும், சத்தியத்தை தேடி உணர்ந்தபின், மேற்சொன்ன சபைப்பிரிவுகளை உதறிதள்ளிவிட்டுகிறிஸ்துவின்ஒரே சபையாகிய புதியஏற்பாட்டு சபையில் தங்களைஇணைத்துக்கொண்டனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் இவர்களைப்பின்பற்றி, கிறிஸ்துவின் சபையில் இணைய இவர்கள் காரணமாக இருந்தனர்.

ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல், பல இடங்களிலும் தோன்றிய இந்த மறுமலர்ச்சிஇயக்கம் 1832-ம் ஆண்டு துவக்கத்தில் ஒருங்கிணைந்து, புதிய ஏற்பாட்டு சபைக்குத் திரும்பும் இயக்கமாக செயல்பட்டது.

1. ''ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக் கடவன்'' என 1 பேதுரு 4:11ம் வசனத்தில் கூறியபடி, கிறிஸ்துவில் நம்பிக்கையுடைய எல்லோரின் ஒற்றுமையை வலியுறுத்தினார்.
2. வேதாகமத்தை மட்டுமே சபையின் சட்ட புத்தகமாக வைத்துக் கொண்டு, மனிதன் உருவாக்கிய சகல சபை சட்ட திட்டங்களையும் புறக்கணித்தனர்.
3. வேதாகமத்தில் குறிப்பிட்ட பெயர்களை மட்டுமே சபைக்கு உபயோகித்து, உண்மை கிறிஸ்தவர்களாக செயல்பட உறுதி பூண்டனர்.
4. புதிய ஏற்பாட்டு சபையில் நடைமுறையிலிருந்த வழிபாட்டு முறைக்குத் திரும்பினர்.

புதிய ஏற்பாட்டு சபையில் தொடர்ந்து ஒழுங்கு இருந்ததை ஏற்றுக் கொண்டு, புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவனுக்கு திரும்புவதில் கவனத்தையும், ஒழுங்கையும் கடைபிடித்தனர்.

**முன்னேற ஒரே வழி, பின்னே செல்வதுதான்;** அதாவது ஆதி சபையைப்போல இருப்பதுதான் என அவர்கள் நம்பினார்கள்.

— தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க

**பாட்டுப் புத்தகம் கிடைக்கும்**

20 M.M. ரெக்ஸின் அட்டை போட்டு, சிறந்த முறையில் பைண்டிங் செய்யப்பட்ட சுமார் 226 பாடல்கள் அடங்கிய பாட்டுப் புத்தகங்கள் விற்பனைக்கு உள்ளன. தபால் செலவு உட்பட, ஒரு பாட்டுப் புத்தகத்தின் விலை ரூ. 10/- மட்டுமே.

**வேண்டுவோர் தொடர்பு கொள்க :**

E.Z. செல்வநாயகம். 2, மணல்மேடு வீதி,
ஈரோடு - 638 002.

Published by Church of Christ and Printed at Jeevasakthi Press
Erode-638 003.
Editor. E.Z. Selvanayagam.

PRINTED MATTER BOOK-POST

TO

If undelivered please return to:
The Editor
THIRUMARAI AASAAN
Post Box No: 58 ERODE-638 001.